**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 56/2020 |
| Name | : Lakshmi |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நரசிங்காபுரத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது அப்பா சீரங்கசாமி. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கார்த்திகை மாதம் ஆங்கில காலணட்ர் 18ம் தேதி காலை 05.40 மணிக்கு சுரேஷ் மற்றும் மணிகண்டன் என்பவர் எனது அப்பாவிற்கு எங்கள் வீட்டிற்கு முன்பு உள்ள ரோட்டில் டீ சாப்பிட சென்றுவிட்டு திரும்பி வரும் போது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நாங்கள் போய் பார்த்த போது எனது அப்பாவிற்கு தலையில் மற்றும் வலது பக்க காலில் அடிபட்டிருந்தது. ஆஜர் எதிரி தான் அன்று எனது அப்பாவின் மீது மோதிய காரை ஓட்டி வந்தார் அவரும் அங்கு இருந்தார். நாங்கள் ஆம்புலன்ஸ் மூலமாக எனது அப்பாவை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அன்று காலை 09.30 மணிக்கு எனது அப்பா இறந்துவிட்டார். இது சம்மந்தாக போலீசார் பிரேத விசாரணை செய்த போது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகார் மனுவை நான் சொல்ல எனது உறவினர் எழுதினார். விபத்து சமயத்தில் எனது அப்பாவிற்கு 80 வயது இருக்கும். புகார் மனுவில் எனது அப்பாவின் வயதை குறிப்பிட்டிருக்கிறேன். புகார் மனுவில் உள்ள விவரங்களை யார் சொன்னது என்றால் போலீஸ்காரர்கள் சொன்னார்கள். எனது அப்பா பொதுவாக குச்சி ஊன்றி தான் நடப்பார் என்றால் சரிதான் கதிர் அடிக்கும் இயந்திரத்தில் காயம்பட்டு அவருக்கு ஒரு காலை எடுத்துவிட்டார்கள். எனது அப்பா இறந்த பின்பு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது அப்பா குச்சி ஊன்றி நடந்த போது அவரே தடுமாறி ரோட்டில் சென்று கொண்டிருந்த வாகனத்தில் விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெற வேண்டி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்